செ.வெ.எண்:38 நாள்:22.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விடுதிகளில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் காலிப்பணியிடங்களை நிரப்பிடும் பொருட்டு, தகுதியுள்ள நபர்களிடமிருந்து 03.03.2017 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**துப்புரவு பணியாளர் காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை 20 (ஆண் 13 (முழுநேரம் - 4 பகுதிநேரம் - 9) பெண் 7 (பகுதிநேரம்)**

எஸ்.சி.ஏ பொது (ஆண்கள்) முழுநேரம் - 1, பகுதிநேரம் - 1, எஸ்.சி.ஏ (பெண்கள்) பகுதிநேரம் - 1, எஸ்.சி (பெண்கள்) பகுதிநேரம் - 5, எஸ்.சி. பொது (ஆண்கள்) முழுநேரம் - 2, பகுதிநேரம் - 6, எஸ்.டி பொது (ஆண்கள்) முழுநேரம் - 1 பகுதிநேரம் - 2, எஸ்.டி (பெண்கள்) பகுதிநேரம் - 1

**விதிமுறைகள்.** - வயது 01.07.2016 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் 40 வயதிற்குள் இருக்க வேண்டும். (அரசாணை நிலை எண் 21 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (எண் 2) துறை நாள் 02.02.2000-ன்படி) வயது தளர்வு உண்டு.

**கல்வித்தகுதி** - எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

**ஊதிய விகிதம்:** முழுநேர துப்புரவாளர் 2500 - 5000 - தரஊதியம் 500, பகுதி நேர துப்புரவாளர் ரூ = 3000/- (தொகுப்பூதியம்)

**நிபந்தனைகள்** - விண்ணப்பதாரர் தங்களின் விண்ணப்பத்தினை புகைப்படத்துடன் பெயர், முகவரி கல்வித் தகுதி, இனம் ஆகிய விபரங்களுடன் A4 தாளில் கணிணி தட்டச்சு செய்து சான்றொப்பமிடப்பட்டு (Attestation) அனுப்ப வேண்டும். இதற்கென விண்ணப்ப படிவம் ஏதும் வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்கள் அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த பகுதிக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். பரிசீலினையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும். விண்ணப்பங்களை 03.03.2017 அன்று மாலை 3.00 மணிக்குள் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், அரியலூர் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். அஞ்சலக தாமதங்களுக்கு நிர்வாகம் பொறுப்பு ஏற்காது தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், அரியலூர் அவர்களுக்கு உண்டு. நேர்முக தேர்வு அழைப்புக் கடிதம் பெறுவது மட்டும் வேலைக்கான உத்தரவு என்று கருதக்கூடாது. நேர்முக தேர்வு நாள், தேர்வு நேரம் மாறுதலுக்குட்பட்டது. நேர்முக தேர்வுக்கு வரும் நபர்களுக்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.